| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| சா. சேதுராமவர்மா,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள்<br>உதவி இயக்குநர்கள். |

ந.க.எண். 012434 / F1 / 2022 நாள் : 19 .07. 2022

ஐயா/அம்மையீர்,

பொருள் : சென்னை – 6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் – மேல்நிலை முதலாம் ஆண்டு துணைத் தேர்வு, ஆகஸ்ட் 2022 – தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்களுக்கு முதன்மை விடைத்தாட்கள் குறித்த அறிவுரைகள் வழங்குதல் – சார்பு.

*****

ஆகஸ்ட் 2022, மேல்நிலை முதலாம் ஆண்டு துணைத் தேர்விற்கான முகப்புத் தாட்கள் தலைமையலுவலகத்திலிருந்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு 18.07.2022 அன்று அனுப்பி வைக்கப்பட்டது. உதவி இயக்குநர்கள் சம்பந்தப்பட்ட தேர்வு மையங்களுக்கு துணைத் தேர்விற்கான முகப்புத் தாட்களை உடன் வழங்கி தைக்கும் பணியினை மேற்கொள்ள தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும், ஆகஸ்ட் 2022, மேல்நிலை முதலாம் ஆண்டு துணைத் தேர்விற்கான தேர்வெழுதவுள்ள மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ள முதன்மை விடைத்தாட்களின் வகைகள் மற்றும் முதன்மை விடைத்தாளுடன் வைத்து தைக்க வேண்டிய வரைகட்டத்தாள், வரைபடங்கள் விவரம் ஆகியவை தேர்வு மையங்களுக்கு வழங்கும் பொருட்டு இத்துடன் இணைத்தனுப்பி வைக்கப்படுகிறது.

உதவி இயக்குநர்கள், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலின்படி, சம்பந்தப்பட்ட பாட முதன்மை விடைத்தாளுடன் வரைபடம் / வரைகட்டத்தாளை இணைத்து தைக்க வேண்டிய விவரங்களை துணைத்தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்களுக்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு** : மேற்குறிப்பிட்டவாறு

ஒம்/–
இயக்குநர்

**நகல் :**

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் } – தகவலுக்காக வழங்கப்படுகிறது
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் } – தகவலுக்காக வழங்கப்படுகிறது
3. கண்காணிப்பாளர், ‘K’ பிரிவு (அலுவலகம்).

**<u>மேல்நிலை முதலாம் ஆண்டு துணைத் தேர்வு – முதன்மை விடைத்தாள் வகை</u>**

| SUBJECTS | SCRIPT CATEGORY | NO. OF PAGES | TYPE |
|---|---|---|---|
| 1. FIRST LANGUAGE<br>2. ENGLISH | HSE-LANGUAGE | 30 | RULED / DOTTED |
| BIOLOGY | HSE-BIO BOTANY<br>Addl.Sheet (Unruled)<br><br>HSE- BIO ZOOLOGY<br>*Stitched together | 14<br>**04**<br>14 | UNRULED<br><br>UNRULED |
| ACCOUNTANCY | HSE- ACCOUNTANCY | 30 | 1-14 UNRULED<br>15-30 Account Sheets |
| OTHER SUBJECTS | HSE (OTHERS) | 30 | UNRULED |

**<u>மேல்நிலை முதலாம் ஆண்டு துணைத் தேர்வு – கூடுதல் விடைத்தாள் பற்றிய விவரம் :</u>**

| TYPE OF ADDITIONAL SHEETS | NO. OF PAGES | REMARKS |
|---|---|---|
| UNRULED | 4 | To be used only for Unruled main sheet using subjects |
| RULED | 4 | To be used only for Ruled main sheet using subjects |
| RULED BALANCE SHEET | 4 | To be used only for Accountancy subject |

# <u>Map & Graph Sheet</u>

**HIGHER SECONDARY FIRST YEAR SUPPLEMENTARY EXAMINATION, AUGUST– 2022**

| Subject | Graph Sheet / Map stitched with Main Answer Book |
|---|---|
| Statistics | One Graph Sheet. |
| Business Mathematics and Statistics | One Graph Sheet. |
| History | One Ancient India Map |
| Geography | One World Outline Map |

ஒம்/–
இயக்குநர்